# பூங்கனி


சிறுவர் மாத இதழ்

ஆகஸ்ட் 2006

ரூ.25

THE NO. 1 TAMIL CHILDREN MAGAZINE IN SRI LANKA

கனி 11




பிரகாசத்தில்...!
வ/சைவப்பிரகாச
மகளிர் கல்லூரி


S.S.வாசன் எழுதும்
விறுவிறுப்பான
வரலாற்றுத் தொடர்






ஓநாய்தான்





இன்ப அதிர்ச்சியில்
இத்தாலி



பூனை குறுக்கால்
போனால் சகுணப்
பிழையா...?

சும்மா... ச்சும்மா...!

100 பேருக்கு 100 பரிசுகள்!

இப்பொழுது தரம் 01 தொடக்கம் O/L (1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11)
வரையான சகல வகுப்புகளுக்குமான வினாத் தொகுப்பு
மாதாந்தம் வெளிவருகின்றது.

# அறிவொளி

தரம் 01 தொடக்கம் 11 வரையான வகுப்புகளுக்கான
தவணைக்குரிய வினாத்தாள் தொகுப்பு

வாங்குங்கள்
பரீட்சையை
வெல்லுங்கள்!

## இ. நிர்மலன் ஆசிரியரின்

### விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும்
### பரீட்சை வழிகாட்டிகள்




**ஸ்ரீரஞ்சனி புத்தகசாலை**
190-A, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு - 13,
தொ.பே : 011 4613078

**ஸ்ரார் புத்தகசாலை**
குட்செட் வீதி,
வவுனியா.
தொ.பே : 077 9231848

# உள்ளே


04 பூனை குறுக்கால் போனால் சகுணப் பிழையா?

08 சும்மாச்... சும்மா...!

10 வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி. பிரகாசத்தில்....!

20 இந்த ஓநாய்தான்...!

22 உலக வரலாறு...!

25 நல்லதே நடக்கும்...!

28 சிரித்து வாழ வேண்டும்...!

35 பச்சை வீட்டு விளைவு...!

47 தம்பி கொஞ்சம் நில்லுப்பா...!


ஹொங் ஹொங்கின் தலைநகரம் – விக்டோரியா.

# பூங்கனி

சிறுவர் மாத இதழ் A Monthly magazine for children

ஆகஸ்ட் - 2006 கனி - 11


ஆசிரியர் பார்வையில்...

## கனவு மெய்ப்படும் காலம்...!

**வ**ணக்கம் வாசகர்களே!

மீண்டும் இன்னுமொரு இதழ் வாயிலாக சந்திப்பதில் சந்தோஷம்!

இரண்டாம் தவணைப் பரீட்சைக்கு ஆயத்தமாகிக்கொண்டிருப்பீர்கள். நன்றாகப் படியுங்கள்! அதிகம் நித்திரை விழிக்காதீர்கள் கண்கெட்டுப்போகும்!

சரி விடயத்திற்கு வருவோம். இது பதினோராவது இதழ். அடுத்து எமது பண்ணிரெண்டாவது இதழோடு பூங்கனியாளுக்கு வயது ஒன்றாகிறது. ஒரு வருட பூர்த்தியை மிகவும் சிறப்பாக கொண்டாடவுள்ளோம். முடிந்தால் உங்களுக்கும் சுவீட் அனுப்பி வைக்கிறோம்! எதிர்பார்த்திருங்கள் செப்டம்பர் 01வரை!

மறக்காதீர்கள் நூறு பேருக்கு நூறு பரிசுகள் காத்திருக்கின்றன. கவனமாக, தெளிவாக வாசியுங்கள் பூங்கனியை.

பல வாசகர்களின் அன்புக் கட்டளைகளை செவிமெடுத்துவருகிறோம். குறிப்பாக எழுத்துத் தவறுகளை சீர் செய்கிறோம். மாற்றங்களை புத்தகத்தில் காண்க.

எமது அன்பு வாசகர்களின் ''கனவு மெய்ப்படும்'' காலம் வெகுதொலைவில் இல்லை. கனியும்வரை காத்திருப்போம். - அன்புடன் ஆசிரியர்

**வாசித்தலினூடே வாழ்வைக் காண்போம்....**

இந்தியாவின் நாணயம் - ரூபா, நயா.


ஆசிரியர்
**ஆர்.இராஜேஸ்வரன்**

கணினி வடிவமைப்பு
**கே.திலீபன்**

ஓவியம்
**எஸ்.கௌரீஷன்**

ஆக்க உதவி
**ஆர்.துவாரகன்**

ஆலோசகர்
**ஜி.ராஜமோகன்**
**ஜெ.ஜெயகோபி**

முகாமையாளர்
**கே.குகராஜ்**

விற்பனை முகாமை
**ஜெ.ஜெயகோபி**

இச்சஞ்சிகை பூங்கனி பப்ளிகேசனுக்காக இல. 32, புனித அந்தோனியார் மாவத்தையில் உள்ள யுனி லங்கா பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

# வெற்றியை நோக்கி...



"எப்போதும் புன்னகையுடன் இருங்கள், புன்னகை என்பது நம்மை இதமாக்குவதோடு, நம்மை சுற்றியிருப்பவர்கள் மத்தியிலும், இனிய சூழ்நிலையை உருவாக்கிவிடுகிறது.


## புன்னகையே பொன்னகை!

சரியாக உடையணியத் தெரியாதவனுக்கும் சிரிக்கத் தெரியாதவனுக்கும் அதிக வேறுபாடில்லை என்கிறார் மகாத்மாகாந்தி.

எதிராளி தராதபோதும், நாம் தரவேண்டிய, தரக்கூடிய சிறந்த பரிசு புன்னகையே. உங்கள் இல்லத்தை விட்டும் நீங்கள் புன்சிரிப்போடு புறப்படுங்கள். புன்சிரிப்புடன் உங்கள் இல்லத்திற்குள் நுழையுங்கள். சூழ்நிலை எப்படியிருந்தாலும் பரவாயில்லை. இதைமட்டும் உறுதியாக பின்பற்றுங்கள், பிறகுபாருங்கள் இல்லத்தில் நிகழும் நல்ல மாற்றங்களை. ■

# பூனை! பூனை! பூனை!

## பூனை குறுக்கால் போனால் சகுனப் பிழையா?



சுறுசுறுப்பான, கூர்மையான பார்வையும், கூர்மையான செவிப்புலனும், கூர்மையான பற்களும், நீண்டு வளைந்த நகங்களும், நீண்ட மீசையும் கொண்ட அழகான, சுத்தமான, வேட்டையாடுகின்ற பாலூட்டிதான்! மியாவ்...! மியாவ்...! பூனைகள்!

பூனைகளைப் பற்றி எழுதுவது என்றால், சுவராசியமான ஏராளமான விடயங்கள் இருக்கின்றன!

பொதுவாகவே, பூனைகளை இரண்டு மிகப்பெரும் பிரிவுகளாக பிரித்திருக்கிறார்கள். ஒன்று மிகப்பெரிய பூனை இனங்கள். இவைகள், சிறுத்தை, புலி, சிங்கம் போன்ற அளவுகளிலும் காணப்படுகின்றன.

இரண்டாவது வகையினர் சிறியவைகள். அதாவது நாம் வீட்டில் எலி பிடிப்பதற்காக வளர்க்கின்ற பூனைகள், கோகர்ஸ், பொப்கட்ஸ், லினெக்ஸ். இவையெல்லாம் ஒவ்வொரு வகைகள். இப்படி 37 வகையான வளர்ப்பு பூனைகள் இருக்கின்றன.




பேர்சியன்

பூனைகளின் பரிணாமம்கூட எகிப்தில்தான் ஆரம்பித்திருக்கிறது.

முதலாவது ஒரிஜினல் பூனை, ஆப்பிரிக்காவில்தான் இருந்திருக்கிறது. கி.மு. 2000ஆம் ஆண்டளவில். இது எகிப்தியர்களால் நன்கு பழக்கப்பட்ட, பழக்க வழக்கம் தெரிந்த பூனை.

தாய்லாந்தின் தலைநகரம் – பாங்கொக்.

# பூனை! பூனை! பூனை!




ஸ்பிங்க்ஸ்

குறுக்காலே பாய்வது, சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்குவது, எலிகளைப் பிடித்து நீண்டநேரம் விளையாடுவது என்று எல்லாமே, எகிப்தியர்கள் சொல்லிக்கொடுத்ததுதான்!

இப்போது நீண்ட அடர்த்தியான, ரோமம் கொண்ட பேர்சியன்ஸ், அங்கோராஸ், உரோமம் குறைந்த மன்க்ஸ், சீமன்ஸ் போன்ற உயர்ஜாதிப் பூனைகலெல்லாம் வளர்க்கப் படுகின்றன.

ஆனாலும் காட்டுடனான நீண்ட தொடர்பை, இப்போதும் பேணிவருகின்றன பூனைகள்.

மிகச்சிறந்த வேட்டையாடும் பிராணியென்றால், அது பூனைதான்! என்று சொல்லுமளவுக்கு கூர்மையான செவிப்புலனையும், தெளிவான பார்வையும், கூரான பற்களையும், நீண்டு வளர்ந்த நகங்களையும், உறுதியான தாடைகளையும் கொண்டுள்ளன.



மாங்க்ஸ்

*※ கற்றதனால் ஆய பயனென்கொல்? வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்.*

அறிவுடையவனாகிய இறைவனின் திருவடிகளை வணங்காராயின் அவர்கள் கற்றதனால் ஆன பயன் என்ன?

# பூனை! பூனை! பூனை!




மீசை என்றாலே ரோசம்தான் இல்லையா? பூனையின் மீசையை டச் பண்ணிப் பார்த்தாலே புரியும் அதனுடைய ரோசம், அவ்வளவு உணர்ச்சிமிக்கவைகள்!

எதையுமே ஆராய்ந்து அறிவது அல்லது துப்புத்துலக்குவது என்றால் அப்படியொரு ஈடுபாடு பூனைகளுக்கு.

அதுபோலவே பாய்வது, மரங்களில் ஏறுவது எல்லாம் கைவந்தகலை.

அதனால்தான், மனிதர்களும், வாகனங்களும், அருகில் வரும்வரை பதுங்கியிருந்து, மிக அருகில் வந்ததும், சட்டென குறுக்கே பாய்ந்து மயிரிழையில் உயிர்தப்பியதாக பெருமைப் பட்டுக்கொள்வதெல்லாம், ஒரு திரில்லிங் அனுபவமாம்! பூனைகளுக்கு.

அதற்கேற்றாற்போலவே, பூனைகளின் உடலமைப்பும், முதுகெழும்பும் சுழலக்கூடிய, நெகிழக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறது.

உண்மையைச் சொல்லுங்கள், இப்படி பூனை பதுங்கியிருந்து பாய்ந்ததில், எத்தனை தடவை நீங்கள் பயந்திருப்பீர்கள்? "மனிதர்கள் குறுக்கால போனால் சகுணம் சரியில்லை' என்றெல்லாம் பூனைக்கு மூட நம்பிக்கை கிடையாது.

ஆகக்குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு மணிநேரத்தை குளிப்பதற்கு பயன்படுத்துகிறதாம்! எப்படியென்றால், தன்னுடைய சொரசொரப்பான நாக்கால், தன்னுடைய மிருதுவான ரோமத்தையும், உடலையும் நக்கி நக்கி துடைத்து சுத்தம் செய்கிறது.

இதனால் பூனைகள் எப்பொழுதும் டிப்டொப் ஆசாமிகள்தான்!

இப்படி உடம்பில் எப்பொழுதும் ஈரத்தன்மை காணப்படுவதால்,


கோனிஸ்ரெக்ஸ்

பிலிப்பைன்சின் தலைநகரம் – மணிலா.

# பூனை! பூனை! பூனை!

கடும்கோடையிலும், கடும்கோபத்திலும் பூனைகள் கூல் (Cool) தான்!

ஒரு நாளைக்கு சராசரியாக 18 மணித்தியாளங்கள் நித்திரை கொள்ளுமாம்! இது ஏனைய பாலூட்டிகளைவிட 3 மடங்கு அதிகமாகும்!

இடையிடையே நித்திரையிலிருந்து, சின்ன இடைவேளைகள் எடுக்கும்போதுதான், இந்த கூத்துக்கள் எல்லாம் நடக்கின்றன.

அதிக நேரம் தூங்கினாலும் பூனைகள் சோம்பேறிகள் அல்ல. அதேபோலத்தான் புலிகளும், இந்த குட்டித் தூக்கத்தைத்தான் Catnaps என்று சொல்வார்கள், ஆங்கிலத்தில்.


**ஐ!**

83 சதவீதமான அறிவு கண்களாலேயே மனிதனுக்கு கிடைக்கிறதாம்!

ஆனாலும் இப்பொழுது செல்லப்பிராணிகள், என்றபெயரில் செல்லப் பிள்ளைகளாகவே வளரும் பூனைகள், எலிகளையும், பூச்சிகளையும் பிடிப்பதற்கு முயற்சிப்பதே இல்லை. பின்ன என்ன, பூனைகளுக்கு பசியெடுக்க, எஜமானர்கள் விட்டால்தானே!

நாய்களைப் போல் இல்லாவிட்டாலும், பூனைகளுக்கும் மோப்ப சக்தி உண்டு.

இரைகளை பிடிக்கும்போது, சந்தடியே இல்லாமல், பவ்வியமாகப் பதுங்கிப் பதுங்கி, ஒரே பாய்ச்சலில் இரையின் கழுத்துப்பகுதியை பிடித்து, கடித்து துண்டாக்கிவிடும். தலைவேறு, முண்டம் வேறாகப் போய்விடும். இனி வேட்டைதான்! ஐந்தறிவு உள்ளவைகளுக்கும் நுட்பம் தெரிகிறது....!



சீமன்ஸ்

# சும்மாக்... சும்மா...!

உயரமான குன்றின் உச்சியில் ஒருவன் நின்றுகொண்டிருப்பதை மூன்று வழிப்போக்கர்கள் கண்டார்கள்.



அங்கே அவன் என்னதான் செய்கிறான்? எனக் கேள்வி எழுந்தது.

''காணாமல் போன வீட்டு விலங்கை தேடுகிறான் போலும்'' என்றான் முதலாமவன்.

''நண்பனைத் தேடுகிறானோ?'' என்றான் இரண்டாமவன். "ச்சீ....! காற்று வாங்கப் போயிருப்பான்'' என்றான் மற்றவன்.

ஒருவர் கருத்தை மற்றவர் ஏற்றுக் கொள்வதாய்த் தெரியவில்லை. "அவனிடமே கேட்டுவிடலாமே!" என்று முடிவெடுத்து மூவரும் சிரமப்பட்டு மலை உச்சியை அடைந்தார்கள்.

''எதற்காக இங்கே நிற்கிறாய்?'' என்று

வடகொரியாவின் தலைநகரம் - பியொன்யாங்.

※ *தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்;*
*வானம் வழங்காது எனின்.*

மழை பெய்யாது போனால். உலகத்தில் பிறர்க்கு உதவும் தானமும், தவமும் இல்லாமல் போகும்.

கேட்டதற்கு, அவன் சொன்னான்... "சும்மாதான்...!" என்று.

இந்த ஜென்கதையைப் போல்தான், நம் நாட்டிலும் சும்மா இருப்பதையே ஒரு சுகமான அனுபவமாக நினைத்துக்கொண்டிருக் கிறார்கள் பலர்.

இரவில் பசியின்றி உறங்குவதற்குத் தேவைப்படுவதை, பகலில் சம்பாதிக்க வேண்டும். மழைக்காலங்களில் செலவழிக்க மற்ற மாதங்களில் சேமிக்க வேண்டும். உயிருள்ளவரை மனிதர்கள் உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

முயற்சி இல்லாதவனுக்கு மகிழ்ச்சி கிடையாது என்கிறது மகாபாரதம். வியர்வையின் விளைச்சலையே ஒருவன் உணவாக உட்கொள்ள வேண்டும், என்கிறது பரிசுத்த வேதாகமம். தன்னுடைய கைகளால் உழைத்து உண்ணும் உணவைவிட, வேறு உயர்ந்த உணவை எங்கும் பெறமுடியாது என்றார் நபிகள் பெருமானார். உழைக்காமல் உண்ணும் உணவு திருட்டுக்குச் சமம் என்கிறது பகவத்கீதை.

சும்மா இருப்பதைவிட மனிதன் செத்துப்போய்விடுவது மேலானது. ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் நதியைப்போல மனிதன் சோம்பலின்றி இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும். பயன்படுத்தப்படாத எந்தப் பொருளும் பாழாய்ப் போகும்.

''விசையுறு பந்தைப்போல'' என்றார் பாரதி. வாசிக்காத வீணைக்கும் விறகுக் கட்டைக்கும் என்ன வித்தியாசம். ஓடினால்தான் நதி, வீசினால்தான் காற்று, பாடினால்தான் குயில், பாடுபட்டால்தான் மனிதன்!

–முற்றும்–

தாய்வானின் தலைநகரம் – தைபீஜ்.

# வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி



இன்னிய வாத்திய குழுவினர்

வவுனியா நகரிலிருந்து ஐந்தரை மீற்றர் தூரமே இருந்தாலும், நகருக்கே உரிய இரைச்சலும், இடையூறும் இல்லாத கற்றலுக்கான இயல்பான, அமைதியான சூழலைக்கொண்டு கம்பீரமாய் காட்சி தருகிறது வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

வறண்டு, புழுதி வாரியடிக்கும் கடுங்கோடையிலும், பசுமையாகவும், செழிப்பாகவும் இருக்கிறது, பாடசாலைச் சூழல்.

"ஏதோ ஒரு அழகும், நேர்த்தியும் தெரியுது இல்லையா?'' என்றார் நண்பர்.

அன்றும் ஒரு வெள்ளிக்கிழமைதான். ''மேடம்... நாங்கள் பூங்கனியில் இருந்து வருகிறோம்!" என்றதும்,

**மாதம் ஒரு பாடசாலை**

"தெரியும்! நீங்கள் அனுப்பிய கடிதமும், புத்தகமும் கிடைத்தது" என்று புன்னகையோடு வரவேற்றார் அதிபர் செல்வி உமா இராசையா.

பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிமுகமாக்கிக் கொண்டோம்.

எமக்குத் தேவையான விபரங்களை கடிதத்திலேயே குறிப்பிட்டிருந்தோம். அதற்கமைய ஒவ்வொரு விடயமும், ஒவ்வொரு துறைசார்ந்த ஆசிரியர்களிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருந்தது.



பசுமையான பாடசாலைச் சூழல்

எமக்குக் கொடுக்கப்பட்ட

⚙ மியான்மார் நாட்டின் பிரதான மொழி – பர்மிஸ்.

முன்னுரிமையிலும், நேர்த்தியான தகவல்களிலும் ஒரு நேர்த்தியான நிர்வாகக் கட்டமைப்பைக் காணமுடிந்தது.

அந்நியர் வருகையால் செல்வாக்கிழந்துபோன சைவத்தையும், தமிழையும் வளர்க்கவென சைவப்பெரியவர்களால், 1934இல் சைவப்பிரகாச வித்தியாசாலையாக பிறப்பெடுக்கிறது பாடசாலை. ஒரு கட்டிடத்தையும் (கதிரேசு




மண்டபம்) ஒரு சில ஆசிரியர்களையும், ஒரு சில மாணவர்களையும் கொண்டு, ஆண்டு 1-11 வரையான வகுப்புகள் கொண்ட ஒரு கலவன் பாடசாலையாக இருந்தது அப்போது.

மாணவர்கள் கல்வியோடு நின்றுவிடாது, உடற்பயிற்சிபோட்டிகள், கலைவிழாக்கள், சங்கீத, நடன, நாடகப் போட்டிகளிலும் பல சாதனைகளை எட்டி, நாளுக்கு நாள் வளர்ந்து வந்துகொண்டிருக்கையில்,



## அதிபர் சொல்லும்போது...

"நன்றி மறப்பது நன்றன்று" எனவே இளமையில் கற்றதையும், அதற்காக அரும்பாடுபட்ட பாடசாலை ஆசான்கள், செலவு செய்த அரசாங்கம் போன்றோர்களை ஒருபோதும் மறக்கலாகாது.

நேரம் தவறாமையும்கூட நன்றியுணர்வுதான், மீளப்பெறமுடியாத நேரத்தை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கற்றீர்கள் என்பதைவிட எதை, எப்படி, எங்கே, அதனாலான பயன் என்ன என்பதையும் சிந்திக்க வேண்டும்.

நாளைய சரித்திரத்தின் ஏடுகளை நிரப்பப்போகிற மாணவச் செல்வங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கற்றுணர்!

அதிபர்
உமாஇராசையா,
S.L.P.S.L, P.G.D.E, P.G.D.E.M



தேசிய சாதனையாளர் த.அனுசா, ஆசிரியர், உப அதிபர், அதிபர், பயிற்சியாளர் S.O,

1962ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலையை சுவீகரிக்கிறது.

1979, 1982ம் ஆண்டுக்காலப்பகுதியில் சாரணியம் உருவாக்கப் பட்டதோடு சிறந்த சேவைகளைப் பெறமுடிந்தது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்றவை கடும் சிரமப்பட்டு, 1974ல் ஒரு கட்டிடத்தையும், 1987இல் சிரமதானம் மூலம் பற்றைக் காடுகளை அழித்து மைதானத்தையும் பெற்றுக் கொடுக்கின்றனர். அப்போது அதிபராக இருந்தவர் திரு.பொ.கனகரத்தினம். அவரது பெயராலேயே மைதானம் இப்போதும் அழைக்கப்படுகிறது.

1991ஆம் ஆண்டில் மகாவித்தியாலயமாக தரமுயர்ந்த கையோடு இரண்டு மாடிக்கட்டிடம், நூலகம் போன்றவை கட்டப்படுகின்றன.

அதிபரின் விடாமுயற்சியாலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பாலும், மாணவர்களின் அதி தீவிர திறமைகளாலும் சாதனைகளாலும் சந்தோசமாக ஒருபடி உயர்ந்து 1994ஆம் ஆண்டில் மகளிர் கல்லூரியாக தரமுயர்கிறது.

> ஜ!
>
> உலகில் 30,000 இன வகை மீன்கள் உள்ளனவாம்!

1994ஆம் ஆண்டில் திருமதி. நா.மாணிக்கவாசகத்தின் தலைமையில் பாடசாலை வருகிறது.

அன்றிலிருந்து இன்றுவரை சாதனைகள்...! சாதனைகள்...! ஒரே வெற்றிமுகமும், ஏறுமுகமும்தான்...! சாதனை for சைவப்பிரகாச என்று சொல்லுமளவுக்கு சாதனைகள் குவிந்திருக்கின்றன.

"எதைப்போடுவது, எதை விடுவது என்று அதிபரும், ஆசிரியர்களும் குழம்பியதைவிட நாம் குழம்பியேவிட்டோம்!"

அதில் குறிப்பிட்டே ஆகவேண்டிய



மூன்றுமாடி கட்டிட திறப்பு விழாவின்போது (07.07.2006)

தேசிய சாதனைகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறோம்.

2002ல் விவேகானந்தா சபையின் சைவ சமயப்பரீட்சையில் தேசிய ரீதியில் 2ம் இடத்தை செல்வி இ.ஆரணியும், 3ம் இடத்தை செல்வி க.நர்மிதாஜினியும் பெற்றனர். 2003ம் ஆண்டின் விவேகானந்தா சபையின் சைவ சமயப்பரீட்சையில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை செல்வி ர.பிரசாந்தி பெற்றமை பெருமைக்குரியது. 2004ம் ஆணடில் அதே பரீட்சையில் செல்வன் கே.சுதர்சன் தேசிய ரீதியில் 3ம் இடத்தைப் பெற்று, வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தார்.

2004, 2005ல் ஆங்கிலதின கவிதை ஒப்புவித்தல் போட்டியில் தேசிய அரங்கில் செல்வி. தணிகை. 2005ல் சேக்கிழார் பண்ணிசை போட்டியில் தேசிய அரங்கில் செல்வி கி.கௌசிகா.

2005, 2006ஆம் ஆண்டில் தட்டெறிதலில் முறையே முதலாம், இரண்டாம் இடங்களையும், குண்டு போடுதலில் மூன்றாம் இடத்தினையும் செல்வி த.அனுசா பெற்றிருக்கிறார். விளையாட்டுத்துறையில் அனுசாவின் சாதனைகள் அளப்பெரியன. இப்பாடசாலையின் பழைய மாணவி செல்வி சி.தணிகை அவுஸ்ரேலிய புலமைப்பரிசிலில் அதிக புள்ளிகளைப் பெற்று, மூன்று வருடம் அவுஸ்ரேலியாவில் கற்பதற்கான வாய்ப்பினைப் பெற்றவர்.

இப்படி பல்வேறு துறைகளிலும் துரித வளர்ச்சிகண்டது பாடசாலை. திருமதி. நா.மாணிக்கவாசகம் (வ/தெ.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி) பதவி உயர்வு பெற்றுப் போக அதுவரை பிரதி அதிபராக இருந்து, 2004ம் ஆண்டில் அதிபராக பதவியேற்ற செல்வி உமா இராசையா, இரண்டு வருட காலத்திலேயே பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறார். 07.07.2006 அன்றும் கூட மூன்று மாடிக்கட்டடம் ஒன்று

திறந்துவைக்கப்பட்டது.

கல்வி வளர்ச்சியைப் பொருத்தவரை 2005 புலமைப்பரிசில் பரீட்சையில் 36 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். O/Lலில் 05பேர் 10A சித்திகளைப் பெற்றுள்ளனர்.


செல்வி சி.தணிகைக்கு (பழைய மாணவி) அதிபர் பரிசுவழங்கி கௌரவித்தபோது

"கற்றுணர்" என்பது பாடசாலையின் கட்டிய வாசகம். "வவுனியா திகழ் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வாழியவே!" என்று ராகத்தோடு முணுமுணுக்க வைக்கிறது பாடசாலைக் கீதம்.

89 ஆசிரியர்களையும், 07 கல்விசாரா ஊழியர்களையும் 1948 மாணவர்களையும் கொண்டு சிறப்பாக இயங்குகிறது பாடசாலை.

நானறிந்தவரை வருடம் தோறும் தவறாமல் (1997 - 2005) சஞ்சிகை வெளியிடுவதென்றால் அது சைவப்பிரகாசதான்". பிரகாசம் என்ற பெயர் சஞ்சிகைக்குப் பொருத்தமாகவே இருக்கிறது. மாணவர்கள் எந்தளவு ஆக்கச் சிந்தனையும், படைப்பாற்றலும் கொண்டவர்கள் என்பதை பிரகாசத்தின் பக்கங்களைப் புரட்டினால் பக்கத்திற்குப் பக்கம் பார்க்கமுடியும். தொடர்ந்தும் பிரகாசிக்க பூங்கனியின் வாழ்த்துக்கள்...

வளப்பற்றாக்குறைபற்றி அதிபர் சொல்கையில், அரங்கமண்டபம், பார்வையாளர் கூடம், மாணவிகள் விடுதி, நீச்சல் தடாகம், மலசலகூடம், சுற்றுமதில், உள்ளக அரங்கு, மருத்துவ அறை, போன்றவற்றைக் குறிப்பிட்டார்.

தரவுகளைப் பெறுவதற்கு எமக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்தும் பல்வேறு துறைகளிலும் பாடசாலை பிரகாசமாக பிரகாசிக்க பூங்கனி வாசகர்கள் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

- தொகுப்பு : தெரிவுக்குழு

# மாணவர் பக்கம்



## அமைச்சரவை அமைச்சர்கள் சிலர்

- இரட்ணசிறி விக்கிரமநாயக்க – பிரமர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
- அமரசிறி தொடங்கொட – நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சு
- நிமால் சிறிபால டி சில்வா – சுகாதாரம், போஷாக்கு அமைச்சு
- மங்கள சமரவீர – வெளி விவகார, துறைமுக, விமானசேவைகள் அமைச்சு
- மைத்திரிபால சிறிசேன – விவசாயம், சூழல், மகாவலி அபிவிருத்தி, நீர்ப்பாசண அமைச்சு
- டபிள்யூ டி.ஜே.செனவிரத்ன – மின்சக்தி, எரிசக்தி அமைச்சு
- கலாநிதி சரத் அமுனுகம – பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு
- அனுர பிரியதர்ஷன யாப்பா – ஊடகம், தகவல்துறை அமைச்சு
- தினேஷ் குணவர்த்தன – நகர அபிவிருத்தி, நீர்வள அமைச்சு
- சுசில் பிரேம ஜயந்த – கல்வி அமைச்சு
- பியசேன கமகே – தொழில், தொழிற்பயிற்சி அமைச்சு

**லோ.வினோபா,**
யாழ்ப்பாணம்

## தெரிந்துகொள்வோம்

- உயரமான நீர்வீழ்ச்சி – ஏஞ்சல் நீர்வீழ்ச்சி
- நீளமான நதி – நைல்நதி
- மிகப்பெரிய ஏரி – காஸ்பியன்ஏரி
- மிகப்பெரிய பாலைவனம் – சகாரா பாலைவனம்
- மிகப்பெரிய கடல் – பசுபிக் கடல்
- மிகப்பெரிய கண்டம் – ஆசியாக்கண்டம்
- மிக ஆழ்ந்த கடல் பள்ளம் – மியான்மர்பள்ளம்
- மிகப்பெரிய தீபகற்பம் – அரேபிய தீபகற்பம்
- மிகப்பெரிய வளைகுடா – மெக்ஸிகோ வளைகுடா

**பி.சித்திரா** தரம் 10, V.M.M.V

## முதுமொழிகள்

- உழைப்பின்றி உண்பவர்கள் திருடர்கள்
- தனிமரம் தோப்பாகாது
- நல்ல புத்தகம் நல்ல நண்பன்
- நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்
- சாதி இரண்டொழிய வேரில்லை
- ஒன்றே குடும்பம் ஒருவனே தேவன்
- நம்பிக்கை உண்டெனில் வெற்றி உண்டு
- வாய்மையே வெல்லும்

**த.கமலரூபன்,** தரம் 07, வ/த/ம/ம/வி

இந்தியாவின் தேசியப் பறவை – மயில்.

## உலகின் பெரிய பல்கலைக்கழகங்கள்

அரச பல்கலைக்கழகம் - அமெரிக்கா
கல்கத்தா பல்கலைக்கழகம் - இந்தியா
மெக்சிகோ பல்கலைக்கழகம் - மெக்சிகோ
பாரிஸ் பல்கலைக்கழகம் - பிரான்ஸ்
புனஸ் எயார்ஸ் பல்கலைக்கழகம் - ஆர்ஜென்டினா
பாம்பே பல்கலைக்கழகம் - இந்தியா
குதலசாரா பல்கலைக்கழகம் - மெக்சிகோ
ராஜஸ்தான் பல்கலைக்கழகம் - இந்தியா
ரோமன் பல்கலைக்கழகம் - இத்தாலி
கலிபோர்னியா பல்கலைக்கழகம் - அமெரிக்கா

**சஞ்ஜீகா மருதப்பிரான்,** தரம் 12,
திருமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி

## நாடுகளும் தாய்மொழிகளும்

அங்கோலா - போர்த்துக்கீஸ்
ஈரான் - அரபு
அவுஸ்ரேலியா - ஆங்கிலம்
இந்தோனேசியா - இந்தோனியா
பாகிஸ்தான் - உருது

**மதுஷாந்தினி,** தரம் 09,
திருமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி.





## விஞ்ஞானிகளும் மானிகளும்

- வளி மண்டல அமுக்கத்தை அளப்பதற்கு பயன்படுத்தும் மானி எது?
  இரசப்பாரமானி
- குருதி அமுக்கத்தை அளப்பதற்கு பயன்படுத்தும் மானி எது?
  மனோமானி
- திரவங்களின் அடர்த்தியைத் துனியப் பயன்படும் மானி எது?
  வெப்பமானி
- ஈர்ப்பு சக்தியை பற்றி முன்வைத்த விஞ்ஞானி யார்?
  சேர்.ஐசாக் நியூட்டன்
- ஒக்சிசன் சல்பைட் ஒக்சைட், அமோனியா போன்ற வாயுக்களை கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
  ஜோசப் பிரீஸ்டலி
- புளூட்டோவை கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
  வில்லியம் பிம்பாக்


**இ.கனகேஸ்வரி**
வ/கிடாச்சூரி அ.த.க. பாடசாலை

மாணவர் பக்கம்

# மாணவர் பக்கம்



## நீங்க சரியான குறும்பு...!



A B

நன்றாகப் பாருங்கள் A என்பவர் சிரித்துக் கொண்டிருக்கிறார். B என்பவர் மொட்டை போட்டுவிட்டு உம்...! என்று இருக்கிறார். சரி இனி புத்தகத்தை தலைகீழாய் திருப்பிப் பாருங்கள் இப்போ B சிரிச்சிட்டு இருக்கிறார். A மொட்டைபோட்டுவிட்டு உம்...! என்று இருக்கிறார்!

**த.நிவேஷாந்தன்,**
தரம் 6, வ/த.ம.ம.வி


## முக்கிய அறிவித்தல்

பாடசாலை சிற்றுண்டிச்சாலை அல்லது கூட்டுறவுக் கடையில் **பூங்கனி** விற்பதாயின் உங்கள் அருகிலுள்ள எமது முகவரிடம் விலைக்கழிவுடன் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லது எம்முடன் தொடர்புகொள்க :
024 2225086


※ அவுஸ்ரேலியாவின் தலைநகர் - மெல்போர்ன்.




ஆ.சத்தியராஜ்
வ/பூவரசங்குளம் ம.வி

## முக்கிய ஆண்டுகள்

- 1ம் உலக மகா யுத்தம் தோன்றியது – 1914
- 2ம் உலக மகா யுத்தம் தோன்றியது – 1939
- ஜேர்மனி இரு நாடுகளாக பிரிந்தது (கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி) – 1945
- ஐ.நா சபையின் தலைமையகம் ஆரம்பிக்கப்பட்டது – 1945
- முதன்முதலில் தபால் முத்திரை வெளியிடப்பட்டது – 1857
- மே தினம் ஆரம்பிக்கப்பட்டது – 1886
- சந்திரனில் காலடி எடுத்துவைக்கப்பட்டது – 1969
- அரபு நாடு சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது – 1945
- சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது – 1907
- யுனஸ்கோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது – 1946


## சிந்தனைக்கு விருந்தாக....

- நெருக்கடிகளுக்கிடையேதான் இறைவன் வெற்றிபெறுவதற்கான வழியையும் கொடுத்துள்ளான். **ஹோம்ஸ்**
- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்னம்பிக்கையை வெளிப்படுத்துவதுதான் கல்வி. **ஓர் அறிஞர்**
- உலகத்தில் மக்கள்பால் அன்புகொள்பவனே உண்மையாக வாழ்பவன் ஆவான். **அந்தோனி**
- கடவுள் உண்மையான பக்தன் ஒருவனுடைய ஒவ்வொரு சிறு காரியத்திலும் புகுந்து காட்சி தருவார். **காந்தியடிகள்**
- அகங்காரத்தை விடுத்து மனிதன் தெய்வ நம்பிக்கையுடன் வாழமுற்பட்டால் நல்வாழ்வு வாழ இயலும். **சாயிபாபா**
- ஒருவனது குறிக்கோளைக்கொண்டே அவன் எத்தகையவன் என்று அறிந்துகொள்ளலாம். **ஹோம்ஸ்**

**கி.துளசிகரன்,** தரம் 10,
யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி.



மின்னேரியாக் குளத்தை கட்டிய மன்னன் – மகாசேனன்.




"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி" இந்த ஓநாய்தான்.

இமயமலைப் பனிப்பிரதேசங்களில் வாழும் ஓநாய்தான், உலகிலேயே மிகப்பழமையான விலங்காம்!




டி.என்.ஏ பரிசோதனை மூலம் ஒவ்வொரு உயிரினமும் உருவாகி எத்தனை வருடங்கள் ஆகியிருக்கும் என்பதைக் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பம் வந்துவிட்டது.

ஒவ்வொரு உயிரினத்தின் மிக நுண்ணிய பாகமான கலங்களில் மைட்டோகண்டிரியா என்ற பகுதி இருக்கிறது. உயிரை இயக்கும் சக்தி இதுதான்! இதற்குள் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை வைத்து, அதன் ஒட்டுமொத்த தலைமுறைகளையே கணித்துவிட முடியுமாம்!


பலநாட்டு உயிரினங்கள் மீது நடத்தப்பட்ட இந்த சோதனை, டேராடூனில் உள்ள இந்திய வனவிலங்கு நிலையத்தில் நடத்தப்பட்டது. சோதனை முடிவில் இந்த ஓநாய்கள் உருவாகி, எட்டு லட்சம் வருடங்கள் இருக்கும் என முடிவு செய்தார்கள்.

இவ்வளவு பழமையான விலங்குகளைக் கொஞ்சம் கொஞ்சமாக வேட்டையாடி, நாம் அழித்ததுபோக இப்போது எஞ்சியிருப்பது வெறும் முந்நூற்றைம்பது தானாம். இருப்பதையாவது காப்பாத்துங்கப்பா....! ■





மாலைதீவின் தலைநகரம் – மலே.

உலகிலேயே மிக நீளமான நாக்கு உடையவர், பம்பாயைச் சேர்ந்த ஜகன்னாத் மகாலே என்பவர்தான். இவருடைய நாக்கின் நீளம் 14.5 செ.மீ சுமார் அரை அடி மலைக்காதீர்கள் இது நிஜம்!




ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த லெஸ் ஸ்டீவர்ட் என்பவர் ஒன்றுமுதல் பத்து இலட்சம் வரை உள்ள எண்களை ஒரேவிரலை மட்டும் பயன்படுத்தி வரிசையாக டைப்அடிக்கத் தொடங்கினார். இதற்காக 7டைப்ரைட்டர்களும், 1000 இங்க் ரிப்பன்களும், 19900 தாள்களும் செலவாகின. சொன்னால் நம்ப மாட்டீர்கள். தினமும் சராசரியாக மூன்றுதாள்கள்வீதம் டைப்அடித்ததில் 10,00,000 என்ற எண்ணை கடைசியாக அடித்தபோது 16 வருடங்கள் 7 மாதங்கள் ஆகிவிட்டன. "ஆ..." என்று வாயைப் பிளக்காதீர்கள். மிகப்பெரிய வாய் என்று கின்னசில் பதிஞ்சிடப்போறாங்க.




மாவீரன் அலெக்சாண்டர் சராசரி ஆணைவிட உயரம் குறைந்தவர் ஆவார். நான்குஅடி, ஒன்பது அங்குலம் உடையவர். இது எப்படி இருக்கு!

கடவுளை அடைய
ஒரே ஒரு வழிதான் உண்டு
அது - அவர் செய்வதையே
நாமும் செய்வதுதான்.
என்னது? படைப்பதுதான்...!

–பால்காகின்

கிவி பறவை வயிற்றில் முட்டை உருவாக 34 நாட்கள் ஆகின்றன.


# நவீன எகிப்திய ராஜ்யம்

**உலக**

S.S.வாசன் எழுதும்

'உலகில் மிகநீண்ட காலம் நீடித்த நாகரீகம் இது. 3500 வருட வரலாறு கொண்ட எகிப்திய நாகரீகம் உலகிற்குவிட்டுச் சென்ற நினைவுகள் பல. ஆரம்பத்தில் எகிப்தியன் அலைந்து திரிந்து வேட்டையாடினான். இதன்பின் நைல் நதிக்கரையில் இருந்து வந்த மனிதன், முன்னேற்றமான வாழ்வைநடாத்தினான். கோடைகால மழையால் நைல் நதி பெருக்கெடுப்பதையும், இதனால் வளமான மண் நைல் நதிக்கரையில் நீண்டுபரவி நிற்பதையும் இவன் கண்டறிந்தான். இதனால் இங்கு வளர்ந்து நின்ற புல்வெளிகளில் செம்மறியாடு, வெள்ளாடு, மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டு வளர்க்க முடியும் என்ற சிந்தனை இவர்களிடம் உதித்தது. இதன் மூலம் விலங்கு வளர்ப்பை இவர்கள் தொழிலாக்கிக் கொண்டனர். எனினும் நைல்நதியின் வெள்ளப்பெருக்கு பயிரழிவுகளையும் ஏற்படுத்தாமலில்லை. தவறான காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்காலும், வரட்சியான காலங்களிலும் எகிப்தியர் பெருமளவு அறுவடைகளை இழக்க வேண்டியிருந்தது. இது எகிப்தில் காலம் காலமாக கடும்பஞ்சத்தை ஏற்படுத்தியது. இதனால் மழைக்காலங்களில் மேலதிக நீரைத் தேக்கி வைக்க குளங்கள், குட்டைககளை அமைக்கத் தொடங்கினர்.

காலப்போக்கில் கிராமங்கள் வளர்ச்சி பெற்று நகரங்களானதுடன் அரசாங்க முறை



பிரமிட்டுக்கள்



# வரலாறு

ஒன்றும் உருவானது. நகரங்களில் வாழ்ந்த கைத்தொழிலாளர்கள் உலோகப் பொருட்கள், செப்புப் பொருட்களைப் பயன்படுத்தி புதிய கருவிகளைச் செய்யத் தொடங்கினர். பானைவனைவோர் புதிய கருவிகளைக்கண்டறிந்ததால் சட்டிபானை உற்பத்திகளும் வேகமாக விரிவடைந்தன. இதனால் எகிப்து செல்வ வளமிக்க பிரதேசமாகவும், உலக வர்த்தகத்தின் உறைவிடமாகவும் மாறத் தொடங்கியது.

கி.மு. 3400இல் எகிப்து இரண்டு இராஜ்யங்களாகப் பிரிந்து இருந்தது.

1. மேல் எகிப்திய ராஜ்யம்
2. தாழ் எகிப்திய ராஜ்யம்


கி.பி 3100இல் நெக்கென் இனத்தின் அரசனான **மேனாஸ்** என்பவன் இரண்டு ராஜ்யங்களையும் தனது அதிகாரத்தின்கீழ் கொண்டு வந்தான். இவனே பின்னர் புராதன எகிப்திய வம்சத்தின் பாரோ எனப்படும் முதல் மன்னனாக விளங்கினான்.

எகிப்திய வரலாறு பிரதானமாக மூன்றாக வகுத்து ஆராயப்படும்.

1. புராதன எகிப்திய ராஜ்யம்
2. மத்திய எகிப்திய ராஜ்யம்
3. நவீன எகிப்திய ராஜ்யம்

புராதன எகிப்திய ராஜ்யத்தில் மனிதனின் இறப்பின் பின் அவனது வாழ்க்கைக் காலம் முக்கியமானது என நம்பப்பட்டது. இதனால் பிரமிட்டுக்கள் எனப்படும் இறந்தவர்களின் மம்மிகளை புதைக்கும் முறை அறிமுகமானது. இதனால் இக்காலம் "பிரமிட் காலம்" எனப்படும்.

மத்திய எகிப்திய ராஜ்ய காலத்தில் இதன் வர்த்தகம் விரிவடைந்தது. இதனால் "வியாபார யுகம்" என இது போற்றப்பட்டது.



"அப்பவே மனுசால்களுக்கு டெக்னிக் தெரிஞ்சிருக்கு இல்லையா?"

இறந்த பிணம் ஒன்றை பதனிடும் காட்சி.

இக்காலத்தில் ஏனைய நிலப்பரப்புகளுடன் எகிப்து வர்த்தகத்தில் ஈடுபட்டதுடன் நூபியா என்ற தெற்கே இருந்த பிரதேசத்தையும் மன்னர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

நவீன எகிப்திய ராஜ்ஜியம், எகிப்திய வரலாற்றில் **பொற்காலம்** எனப்போற்றப்படுகிறது. தீபீஸ் (Thebes) என்பதை தலைநகராகக் கொண்டு விளங்கிய எகிப்து, தனது சாம்ராஜ்யத்தை இக்காலத்தில் விரிவுபடுத்திக்கொண்டது. அருகிலிருந்த மத்தியகிழக்கு நாடுகள் எகிப்திய பாரோ மன்னர்களால் கைப்பற்றப்பட்டு எகிப்துடன் இணைக்கப்பட்டது. பாரோ மன்னர்கள் பாரிய கோவில்களையும் இக்காலத்தில் கட்டி செழிப்பான ராஜ்யத்தை உருவாக்கினர்.


இந்த வேளையில் எகிப்தின் செல்வவளம் ஏனைய ஆட்சியாளர்களின் கண்ணில்பட்டது. இதனால் ஆசிரியா கிரேக்கம், பேர்சியா, ரோம் போன்ற ராஜ்யங்களைச் சேர்ந்த படைகளின் ஆக்கிரமிப்புக்கு பிற்காலத்தில் எகிப்து இலக்கானது.

– வளரும் வரலாறு.


**எதிர்பாருங்கள் அடுத்த இதழில்**
**குவாங்கோ நதிக்கரை நாகரீகத்தின் எழுச்சியும், காலத்தை வென்ற கனவான்களும்.**

**S.S. வாசன் எழுதும்**


*வரலாற்றுத் தொடர்...*


எல்லாம் நன்மைக்கே
ஓவியம் & கதை : எஸ்.கௌரீஷன்
சிங்கபுரி மன்னனிடம் அறிவும் திறமையுமுடைய மந்திரி இருந்தார். ஒருமுறை மன்னர் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது மன்னரின் ஒரு விரல் வாழ்வீச்சில் துண்டாகியது. எல்லோரும் மன்னருக்கு ஆறுதல் கூறினர்.
இத்தகைய ஆபத்தான காயங்கள் போர்ப்பயிற்சியின்போது ஏற்படும் அரசே!
அப்போது அங்கு வந்த மந்திரி
அரசே, உங்கள் விரல் வெட்டுண்டது. நன்மைக்கே என நினைத்துக் கொள்ளுங்கள், எல்லாம் நன்மைக்கே அரசே.


இது கேட்ட அரசருக்கு கடும் கோபம் வந்தது.
நானே விரல் வெட்டுண்ட வேதனையில் இருக்கிறேன், நீர் என்னவென்றால் என்விரல் வெட்டுண்டது நன்மைக்கே என்கிறீரே.
வீரர்களே இந்த மந்திரியையும் அவனது குடும்பத்தையும் சிறையில் அடையுங்கள்.
மந்திரியும் அவரது குடும்பமும் சிறையில் அடைக்கப்பட்டனர்.
ஒருமுறை மன்னர் வேட்டைக்காக காட்டிற்கு தனியே புறப்பட்டார்.
அங்கே வழிதவறி காட்டுவாசிகளிடம் பிடிபட்டார்.
ஏய்! அவனைப் பிடித்து நம் கடவுளுக்குப் பலியிட அழைத்துச் செல்லுங்கள்.
காட்டுவாசியொருவன் மன்னனை தாக்கினான்.




இந்தியாவில் மிக நீண்ட நதி – கங்கை.




உலக வரலாற்றின் நினைவுகள் என்ற நூலை எழுதியவர் - காந்தி.

# சிரித்து

ஆசிரியர் : "ரோம் நகரம் எரிகையில் பிடில் வாசித்தவர் நீரோ!"

மாணவன் : "ஐயோ, சத்தியமா நானில்லை"





"நான் கணிதபாடத்தில் சத்தான புள்ளி வாங்கினேன்"

"அப்படி என்ன வாங்கினாய்?"

"முட்டை தான்"

"மூளை இருக்கான்னு கேட்டா கோபப்படாம பதில் சொல்பவர் யார் தெரியுமா?"

"யார்?"

"கசாப்புக் கடைக்காரர்"



🔅 சவுதி அரேபியாவின் நாணயம் - ரியால்.

# வாழவேண்டும்

"பேக்கறி கடைக்காரர்
ஒரு படம் எடுத்தார்?

"என் பேர்?"

"ஜாம்" இருக்க
பயமேன்.



"அதோ அங்க போறாரே அவர் அங்க போறார்."
"எப்படி சொல்றீங்க ?"
"அதான் அவர் அங்க போறாரே."

தொகுப்பு :
**ஆர்.துவாரகன்**
புதுக்குளம் ம.வி



மந்திரியார்: நீங்கள் சொன்னமாதிரியே
பாடை தயாராகிவிட்டது.

மன்னன் : "அடப்பாவி நான் படை
அல்லவா தயார்பண்ணச்
சொன்னேன்.

# ரகசிய புதையல் 09

அருணின் உடல் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. மந்திரவாதி உரக்கக் கத்தினான்.

"ஹா...ஹா...ஏய் குள்ளர்களே! இங்கே வாருங்கள்"

குள்ளர்கள் ஓடிவந்து கைகட்டி பணிந்து நின்றார்கள்.

ஏய் குள்ளப் பசங்களா... அந்த மூடர்கள் இன்னும் ஐந்து நாட்களில் மாவூர் காட்டுக்கு சென்று விடுவார்கள், அங்கேதான் புதையல் இருக்கிறது. புதையல் இருக்கும் இடம் அவர்களுக்குத்தான் தெரியும் ஆனால்....திறப்பு என்னிடமல்லவா இருக்கிறது.





சிங்கப்பூரின் தலைநகரம் - சிங்கப்பூர் நகர்.

அந்த குரங்கை கொல்ல வேண்டும்...!" "ஏன் குருவே?" குள்ளர்களில் ஒருவன் கேட்டான்.

''முட்டாள்... அந்த பொடியனின் உயிர் அந்த குரங்குக்குள் அல்லவா இருக்கிறது..."

"சரி குருவே!"

''நான் இப்பொழுது செல்கிறேன். இந்த உடல் எரிந்து முடியும்வரை காத்திருந்து அழித்துவிடுங்கள்"

மந்திரவாதி கட்டளை இட்டு ஒரு கோர தாண்டவத்தை ஆடிவிட்டு மறைந்துவிட்டான். குள்ளர்கள் பக்கத்தில் அமர்ந்து இருந்தார்கள்.

◆◆◆

"தாத்தா என் அண்ணாவைப்பற்றி ஏதாச்சும் நியூஸ் தெரியுமா?'' ஆர்த்தி ஆதங்கத்தோடு கேட்டாள்.

''உன் அண்ணாவின் உடலை எரித்து விட்டார்கள்"

''தாத்தா? கத்தினாள் ஆர்த்தி...

"ஆ...என் அண்ணா..." அடக்க முடியாமல் காடு அதிர கத்தினாள், கதறினாள்.



தாத்தா மௌனித்து நின்றார் திடீரென ஆர்த்தி மயங்கிவிட்டாள்.

''ஆர்த்தி... ஆர்த்தி... கோடா தண்ணீர் கொண்டுவா'' தாத்தா சொல்ல கோடன் விரைந்து சென்று தண்ணீர் எடுத்து வந்தான்.

''ஏன் எஜமான் அப்படியொரு பொய் சொன்னார்?" ஒருவேளை அருணின் உடல் எரிக்கப்படவில்லை என்பது எஜமானுக்கு தெரியாதோ?'' கோடன் யோசித்துக்கொண்டிருந்தான்.

''கோடா... உன்னிடம் ஒரு பொருள் தந்தேனே வைத்திருக்கிறாயா?'' தாத்தா கோடனைப்பார்த்துக் கேட்டுக்கொண்டே ஆர்த்தியின் முகத்தில் தண்ணீர் தெளித்தார்.

"வைத்திருக்கிறேன் ஏன் எஜமான் ஆர்த்திக்கு பொய் சொன்னீங்க!'' கோடன்கேட்டான்.

''ஷ்...'' மௌனிக்கச்

ஜ!

ஒரு ஈ ஆனது ஐந்தரை மாதத்தில் 55,98,720 ஈக்களாக பெருகிவிடுகிறதாம்!

※ **சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்**
**வகை தெரிவான் கட்டே உலகு.**

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தின் பிரிவுகளை நன்குணர்ந்தவனிடத்தே உலகம் அடங்கியுள்ளது.

சொன்னார் தாத்தா.

"இப்பொழுது அந்த மந்திரவாதி இங்கே வருவான் அந்த குரங்கைப் பிடித்துச்செல்ல..." என்றார் தாத்தா.

"ஷ்...பேசாதே...இப்போது அவன் வருவான் சிலுவையை பத்திரமாக வைத்திரு... அதை அவன் முன்னால் பிடித்து மந்திரம் கூறினால் அவனால் ஒன்றும் செய்ய முடியாது அவன் ஓடிவிடுவான்..." என்றார் தாத்தா.



தாத்தா கோடனிடம் ஒரு சிலுவையை முதலிலே கொடுத்து வைத்திருந்தார். ஆர்த்தி மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

"ஆர்த்தி ஆர் யு ஓ கே?" தாத்தா மெல்ல கேட்டார்.

"அண்ணா...அண்ணா" என்று முனகிக் கொண்டிருந்தாள் ஆர்த்தி.

இவர்கள் நடந்து செல்லுகையில் எதிரே கிடந்த மிகப்பெரும் யானைப்பொறியை கவனிக்கவில்லை.

"ஆ..." அலறியவாறே கோடன் கிடங்கிற்குள் விழுந்தான்.

"கோடா...?" தாத்தா திடுக்கிட்டார்!

குழிக்குள் எட்டிப்பார்த்தால் எதுவுமே தெரியவில்லை. கும்..இருட்டாக இருந்தது.

"தாத்தா?" திடீரென திடுக்கிட்டு கத்தினாள் ஆர்த்தி.

தாத்தா திரும்பிப்பார்த்தார்!

பின்னால் மந்திரவாதி மாய வித்தைக்காரி வேடத்தில், அவர்கள் இருக்கும் இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தான்.

"கோடா அந்த சிலுவையை வெளியே எறி..." என தாத்தா கேட்க உள்ளே இருந்து "அதைக் காணவில்லை!" என குரல் வந்தது.

மர்மங்கள் விலகும்...

யப்பானின் தலைநகரம் – டோக்கியோ.

# பச்சை வீட்டு விளைவு


# Green House Effect

கிறீன் ஹவுஸ் எபெக்ட் என்றால் வளிமண்டலத்தில் விடப்படுகின்ற $CO_2$, CO, $CH_4$, CFC, போன்ற வாயுக்கள் ஒன்றாகச் சேர்ந்து புவி மேற்பரப்பில் இருந்து 25m தூரத்தில் ஒரு கண்ணாடி போன்ற அமைப்பை ஏற்படுத்துகிறது. (அதாவது வீடு கட்டுகிறது)

உங்களுக்கு நன்றாகவே தெரியும், சூரிய ஒளி நேரடியாக புவி மேற்பரப்பை அடைந்து பூமியும், தாவரங்களும், விலங்குகளும் பயன்படுத்தியது போக மிகுதி தெறிப்படைந்து வளிமண்டலத்திற்குள்ளேயே விடப்படுகிறது.

இங்குதான் ஆரம்பிக்கிறது பிரச்சினை, இந்த திரும்புகின்ற ஒளிக்கதிர்களை இடையிலே தடுத்து நிறுத்துகிறார்கள். மேற்சொன்ன கண்ணாடி வீட்டுக்காரர்கள்.

இந்த தடுப்புக்கு பின்னர் விளைகின்ற விளைவுகள் அத்தனைக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள், கிறீன் ஹவுஸ்காரர்கள்தான்! அதுதான் கிறீன் ஹவுஸ் எபெக்ட்.



இதனை படம் நன்றாக விளக்கும்.

பாண் சூழைக்குள் வெப்பத்தை தேக்கி வைத்ததும், ரொட்டி மா வெந்து, வெதும்பி எப்படி பாணாக மாறுகிறதோ, அதுபோலதான் சூரிய ஒளியை தேக்கிவைப்பதன்மூலம் பூமி நாளுக்குநாள் வெப்பமடைந்து வருகிறது (Warming up).

“அதனாலென்ன அதுதான் ஏ.சி கண்டுபிடிச்சிட்டாங்களே'' என்று சொல்லக்கூடாது.

புவி வெப்பம் காரணமாக, துருவப்பகுதி பனிப்பாறைகள் உருகி, கடல் மட்டம் மெதுமெதுவாக உயர்ந்துவருகிறது. 2030ம் ஆண்டுகளில் ஒரு மீற்றர் உயர்ந்துவிடுமாம் கடல்மட்டம்! இதனால் பங்களாதேசில் மட்டும் 150 லட்சம் மக்கள் வீடுகளை இழக்க நேரிடுமாம்!

‘‘இதுக்கு விஞ்ஞானிகள் ஒரு வழியையும் கண்டு பிடிக்கலியேப்பா...!”

**ஐ!**

மனித உடலினுள் உள்ள 6 லீட்டர் இரத்தமும் ஒரு நிமிடத்திற்குள் இதயத்தைச் சென்று திரும்புகிறதாம்!

## உங்களுக்குத் தெரியுமா?

1) ஒவ்வொரு ஆண்டும் 105,000 சதுர கிலோமீற்றர் காடுகள் அழிக்கப்படுகிறது. (அயர்லாந்து, வேல்ஸ் போன்ற பிரதேசங்களின் கணக்கெடுப்பின்படி)

2) மேற்கு நாட்டு குடும்பமொன்று ஆண்டுக்கு 12 டொன் காபனீரொட்சைட் வாயுவை கிறீன் ஹவுஸ் எபெக்டுக்காக வழங்குகிறார்கள்.

3) ஐரிஸ் கடல்தான் அதிகளவு சூரிஒளியைப்பெறுகிறது. அதுபோல அதிகளவு நீர் ஆவியாவதும் அங்கேதான்.

4) 350 லட்சம் மரங்கள் ஆண்டுதோறும் உருவாக்குகின்ற பேப்பர்கள்தான். உலகத்தின் 75வீத பேப்பர் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

மியன்மாரின் தலைநகரம் – ரங்கூன்.




**Dear பிரண்ட்ஸ்**

நான் உங்கள் குறும்பன் அண்ணா. எல்லாரும் நல்லா இருக்கிறீர்களா?

Ok let's go to Masala Mix

## ஜோக்

வழக்கம் போலவே முதல்ல ஒரு ஜோக் பார்ப்போம். ஒருத்தன் தன்ர ப்ரெண்ட் குறும்புக்குமரனுக்கு போன் பண்ணினார். குறும்புக்குமரனின் அம்மா போனை எடுத்து

"ஹலோ... யார் கதைக்கிறது?" என்றார்


போன் எடுத்தவர் கேட்டார் "குறும்புக்குமரன் நிக்கிறாரோ?" என்று

"அவன் குளிக்கிறான்!" என்றாராம் தாய்.

"ஓ...சாரி... சாரி...றோங் நம்பர்!" எண்டு போனை வச்சுட்டாராம். எப்படி?

## நியூஸ்

இந்த திருவிழாக்கள்ள ஒலிபெருக்கியில பாட்டுபோடுவீனமெல்லோ.... உதயார் கண்டுபிடிச்சது தெரியுமோ? ஹாரஸ் ஷார்ட் என்கிறவர் பிரிட்டன்ல 1900ம் ஆண்டு (கண்டு) பிடிச்சார். எதுக்காச்சும் தேவைப்படும் குறிச்சுவச்சுக்கோங்கோ. அப்புறம் நம்ம மசாலா மிக்ஸில செம Hit and Hot லேட்டஸ் மொழி!



10 கி.மீ வேகத்தில் வீசினால் அது தென்றல்!

## லேட்டஸ் மொழி!

"ஹோட்டல்ல காசில்லாட்டி மாவாட்டலாம்,
ஆனா பஸ்ஸிலே காசில்லாட்டி பஸ்ஸ ஆட்ட முடியுமா?"


சூப்பரா இருக்குல்ல? அடுத்து ஒரு புதுப்பகுதி! டெஸ்ட்டுக்கு தயாராகிவரும் மாணவர்களுக்கு பயனுள்ள பகுதி

## டச்சிங்...!

இந்தப் புதுப்பகுதி பரீட்சையில் வெல்வதற்கு துணையாக நிற்கும் ஒரு தோழன் இம்மாத டச்சிங்...

"நீங்கள் யோகா, உடற் பயிற்சிகள் செய்து வருபவர்களா? இவற்றால் படிக்கும் நேரம் பெரிதாக ஒன்றும் ஆகிவிடாது. தொடர்ந்து செல்லுங்கள்!" ஆமாங்கோ இதை கண்டிப்பா ஃபாலோ பண்ணுங்க!

## கார்ட்டூன்




கோபம் வந்தால் சிலர் என்னெல்லாம் பண்ணுவாங்க. இவரைப் பாருங்க இங்க! ஐயோ... இவர் குத்துறது சத்தியமாக மண்மூட்டையல்ல. இப்படி நீங்களும் பஞ்சுமூட்டைக்கு குத்திக்கொண்டு வாறமாத பூங்கனி படியுங்க... Keep in touch

17 கி.மீ வேகத்தில் வீசினால் அது காற்று.

# வன்னியின் கதை 9

கலாநிதி முல்லைமணி எழுதும்....

யாழ்ப்பாணத்தைப் பரராசசேகரன், செகராசசேகரன் என மாறி மாறி அரியணைப் பேரைத்தாங்கி ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் சுத்தமான அரச பரம்பரையில் வந்தவர்கள் அல்ல. பிராமணக் கலப்புடையவர்கள். அந்தணன் ஒருவனுக்கும் சத்திரியப் பெண்ணொரித்திக்கும் பிறந்தவன்தான் ஆரியச்சக்கரவர்த்தி சிங்கையாரியன். எமது மூதாதையர்கள்தான் அவர்களை ஆரியச்சக்கரவர்த்திகள் என நாமம் சூட்டி அரசர்கள் ஆக்கியவர்கள். இந்தமரபில் வந்த சங்கிலி மன்னனின் ஆஸ்தான ஆலோசகராய் இருந்தவர் என் தந்தை.

யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கீசர் கைப்பற்றியபோது என்தந்தையார், தாயாரையும் என்னையும் அழைத்துக்கொண்டு வன்னிக்கு வந்துவிட்டார். கரிக்கட்டுமூலையில் நாம் வசித்தோம். அப்போது எனக்குப் பன்னிரண்டு வயது என்றாலும் வேதங்களையும் ஆகமங்களையும் மட்டுமன்றி அர்த்த சாத்திரத்தையும் கற்றவன் நான். இதைவிடத் திருக்குறளிலுள்ள அரசியல் அமைச்சியல், அங்கவியல் அனைத்திலுமுள்ள ஐம்பத்தேழு

**ஐ!**

முள்ளங்கி, கரட் போன்றவை கிழங்கு வகைகள் அல்ல. அவை வேர்கள்தானாம்!



பாக்குநீரிணையின் தூரம் – 32 கி.மீ

அதிகாரங்களையும் கற்றிருந்தேன் இவற்றிற்கு மேலாகச் சைவசிந்தாந்தத்திலும் பாண்டித்தியம் உண்டு. நான் கற்ற கல்வியையும் பெற்ற அனுபவத்தையும் வன்னிமைகளைப் பிரிப்பதற்கே பயன்படுத்துகிறேன்.

கிராமவிட்டன் வன்னிமைகளைப் பிரிக்க முனைவதன் காரணத்தை காஞ்சிரங்காயன் கேட்டான்.

அவர் அதனை உடனே சொல்லவில்லை, படகிலிருந்து இறங்கியஅவர்கள் ஒற்றையடிப் பாதையால் நடந்தனர். அந்தணர் வீதியில் அமைந்துள்ள கிராமவிட்டரின் வீட்டை அடைந்தனர். விடிந்து பலமணி நேரமாகியும் காஞ்சிரங்காயன் எழுந்திருக்கவில்லை. விட்டர் அவனைத் தட்டி எழுப்பினார். அந்தக்கணத்தில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து பார்த்தபோது கயிலைவன்னியனின் தூதுவன் வாயிலில் நின்றான்.



கிரிவிகாரையை அமைத்த மன்னன் – பராக்கிரமபாகு.

கயிலை வன்னியனார் கிராம விட்டரை அழைத்திருந்தார். கிராமவிட்டரின் சதிபற்றி அறிந்திராத மன்னன் அவரை அந்தரங்க ஆலோசகராகவைத்திருந்தான். அரண்மனையையும், சிவபுரநாதர் ஆலயத்தையும் கட்டுவதற்கான ஆலோசனைச் சபையில் கிராமவிட்டரும் இருந்தனர். மிகப்பிரமாண்டமான முறையில் இவற்றைக்கட்ட வேண்டும் என அவர் ஆலோசனை கூறினார். இவற்றை அமைப்பதன் மூலம் அரசின் செல்வம் முழுவதும் செலவளிக்கப்பட்டுவிடும். மன்னன் மக்களிடம் கூடுதலான வரியறவிடநேரும். இதனால் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரும். என்பதே அவரின் திட்டமாகும். ஆனால் கயிலைவன்னியன் ஆலயத்தை நிர்மாணிக்க விரும்பினான். அரண்மனை அமைக்கும் திட்டம்பின்போடப்பட்டது.

இப்படி இவர்கள் ஆலோசனை செய்துகொண்டிருக்கும்போது ஒல்லாந்ததூதுவன் வந்தான்.

ஒல்லாந்த தூதுவன் கொண்டுவந்த ஓலையை வாசித்தவுடனே. மன்னன் கடும்கோபம் அடைந்தான். அவர்கள் கயிலாயவன்னியன் ஒல்லாந்தருக்குத் திறைசெலுத்த வேண்டும் என்று எழுதியிருந்தார்கள். பனங்காமவன்னியர் எப்போதும் போர்த்துக்கேயருக்கோ ஒல்லாந்தருக்கோ திறை செலுத்தவில்லை. ஒல்லாந்தரின் இந்தக்கட்டளைக்கு

- தொடரும்...

※ ***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்***
***வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.***

உலகத்திலே வாழவேண்டிய முறையின்படி வாழ்பவன்,
தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுவான்.

மிக முக்கிய நெடுங்கோடு – கிறீன்வீச்கோடு.

# "கவி" தா...!

## நாளை நமது

நாளை என்பது
நமதாகும் என்ற நம்பிக்கை
நிட்சம் வேண்டும்,
வாழ்க்கையிலே.
வாழ்க்கையில்
நாளைய கற்பனைகளும்
நாளைய எதிர்பார்ப்புக்களும்
இருந்துவிட்டால்
நெஞ்சம் கனத்து
இன்று என்பது
அனாதையாகிவிடும்
விடை தெரியாத வினாவாகிவிடும்.

– சுபா

## தாய்

பெற்று மகிழ்ந்தவள் தாய் – நம்மைப்
பேணி வளர்ப்பவள் தாய்
முற்றங் களிப்பாலே – எமக்கு
முத்தம் அளிப்பவள்!

நாவுக்கு இனிதாக – உணவை
நாழத் தருபவள் தாய்
தேவை யறிந்து தினம் – பண்டம்
செய்து கொடுப்பவள்!

அழகுதரும் ஆடைகளை – நமக்கு
அணிந்து பார்ப்பவள் தாய்
மழலைச் சொல் கேட்டு மனம்
மலர்ச்சி கொள்பவள்!

– இ.கனகேஸ்வரி
கிடாச்சூரி அ.த.க.பாடசாலை

ஜ!

நாம் பாவிக்கின்ற
சைக்கிளில் மொத்தம்
1430 உதிரிப்பாகங்கள்
உள்ளனவாம்.

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது நிகழ்காலம்
வாழும் முறையில் வரும் காலம்
சேதம் வாழ்வில் சேராமல்
செய்வன திருந்தச் செய்தால்

செல்வம் உனக்கு வரும்போது
சின்னக் கைகளால் தானமிடு
அள்ளித் தருவான் ஆண்டவனும்
அளவில் அவன் கை பெரிதன்றோ?

– விஜி மகாலிங்கம்
யா/விக்றோரியாக் கல்லூரி – சுழிபுரம்.

ஜேர்மனியின் தலைநகரம் – பேர்லின்.

# வந்துட்டார் விஞ்ஞான வாத்தியார்




**வைரங்களை எரிக்க முடியாதுதானே?**


ஜெஸ்ரின் - தாழ்வுபாடு, மன்னார்.

முடியாது! என்று சொன்னால் நீங்கள் சந்தோசப்படுவீர்கள் ஜெஸ்ரின். ஆனால் எரிக்க முடியும் என்பதே விஞ்ஞானம். 1400 முதல் 1607 பாகை பாரன்ஹீட் அளவுக்கு சூடாக்கினால் வைரம் தானாகவே எரிந்து போகிறது. நான் என்ன செய்ய?

**தேங்காய், தேசிக்காய், பூசனிக்காய் இதையெல்லாம் பழுத்தபின்னும் "காய்" என்கிறார்களே, இவற்றுக்கு பழத்திற்குரிய தன்மைகள் இல்லையா?**


தயாநிதி - கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

தேங்காய்ப்பழம், எழுமிச்சைப்பழம் என்று சொல்ல முடியும். பூசனிக்காயை பழம் என்று சொல்ல முடியாவிட்டாலும், தாவரவியலின்படி பூசனிக்காய் காய்கறி வகை கிடையாது, பழவகைதான் அதைவிட மூன்றினது விதைகளும் முளைத்து இன்னுமொரு தாவரத்தை உருவாக்குகிறது எனவே பழத்துக்குரிய தன்மைகள் உண்டு.




**வாத்தியாருக்கு வணக்கம், நித்திரையில் கட்டிலில் இருந்து விழுந்தால் நோவதில்லையே ஏன்?**

க.சாருகா - புளியங்குளம், இந்துக்கல்லூரி.





நித்திரைசெய்யும்போது மூளை, இதயம் தவிர அனைத்து பாகங்களும் ஓய்விலையே இருக்கின்றன. வலியை உணரவேண்டுமானால் பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து மூளைக்கு சேதி போகவேண்டும். சரி சாருகா கட்டிலில் இருந்து விழுந்து விழித்துக்கொண்டதும் வலித்திருக்குமே!

*வியட்நாமின் தலைநகர் – ஹனோய்.*

✉ **நைலோன் (Nylon) என்பது ஆங்கில மொழியா?**
**எஸ்.சுஜீவன் - திருஞான சம்பந்தர் வீதி, திருகோணமலை.**

✍ நைலோன் உருவானதே ஒரு சுவாரஸ்யமான கதைதான். Nylon முதன் முதலில் நியூஜோர்க், லண்டன் நரங்களில்தான் தயாரிக்கப்பட்டது. Newyorkன் NYயும், Londonன் LONனும் · சேர்ந்துதான் Nylon வந்தது. அப்படியானால் ஆங்கிலம்தான் இல்லையா?



நைலோன்


# நிஜமாவா?



**மிகவும் வித்தியாசமாக
எமது முதலாவது ஆண்டு
சிறப்பிதழ் வெளிவரவிருக்கிறது.**


பக்கத்திற்கு பக்கம்
ஜாலிகள், குறும்புகள்
கடிகள், துணுக்குகள்
கணக்குப் புதிர்கள்
கார்ட்டூன்கள், ஜோக்குகள்
அறிவுக்கு விருந்தான விடையங்கள்
இன்னும் ஏராளம்...!

*அதிக பக்கங்கள்! அதே விலையில்!*

**வறவிட்டால் கவலைப்படுவீர்கள்... SO மிஸ்பண்ணாதீங்க....**


போலந்தின் நாணயம் - ஸ்லோட்டி.

# ஆறு 6 வித்தியாசங்கள்





இலங்கையின் தலைநகரம் - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர.

பூங்கனியின் அனைத்து ஆக்கங்களும் சூப்பர். மசாலா மிக்ஸ் இன்னும் சூப்பர். எழுத்துத் தவறுகளை சரிசெய்தால் இன்னும் நல்லது.

**க.சாருகா**
புளியங்குளம், வவுனியா.




என் இனிய நண்பன் பூங்கனிக்கு, என் சுவாசத்தில் தென்றலாய் தவழ்ந்து வருகின்ற பூங்கனியே! உன்னை வாழ்த்துவது என்றால் வார்த்தைகளை தேட வேண்டியே இருக்கிறது. உன்னிதழ்களில் துள்ளி விளையாடும் ஆக்கங்கள் அனைத்துமே மிகத்தரம் வாய்ந்தவை. என் அன்பு பூங்கனிக்கு எனது உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**அஜிதா குணசீலன்**
தரம் 12, கணிதப்பிரிவு,
வ/இறம்பைக்குளம் ம.ம.வி

மீண்டும் மாதம் மாதம் பூங்கனியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாசகியாகிவிட்டேன். தயவு செய்து இனியாவது தொடர்ந்து வெளியிடுங்களேன். பிளீஸ்!

**மோகனா வன்னிய சிங்கம்**
மத்திய கல்லூரி, கிளிநொச்சி.

அன்பின் பூங்கனிக்கு!

நான் பூங்கனியை ஆரம்பத்திலிருந்து வாசித்து வருகிறேன். வன்னியின் கதை, உலகவரலாறு, வந்திட்டார் விஞ்ஞான வாத்தியார் இன்னும் குறும்புக் குமரனின் குறும்புகள் ஆகியன பூங்கனியை மேலும் மெருகூட்டுகின்றன. பூங்கனி மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

**பரசுராமன்**
யா/ஹாட்லிக் கல்லூரி, தரம் – 09,
பருத்தித்துறை.

பங்களாதேஷ் சுதந்திரமடைந்த ஆண்டு – 1971.

# கணினி ஞானி


ஐந்தாம் தலைமுறை அளப்பெரிய வளர்ச்சிகளைக் கொண்டது. வன்பொருட்களில் (Hardware) ஏற்பட்ட மாற்றங்களைப் போல மென்பொருட்களிலும் (Software) பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. கிட்டத்தட்ட மனிதனைப் போல தொழிற்படக்கூடிய "ரோபோ" போன்ற சமாச்சாரங்கள் எல்லாம் இதுதான்.

இப்பகூட பார்த்திருப்பீர்களே ரோபோ நாய்க்குட்டிகள், கால்பந்து விளையாடியது, அட ஆமாப்பா ரீ.வியில் தான். இனி செய்திகளை கவனமாகப் பாருங்கள். உண்மையில் கணினியினுடைய மதிநுட்ப திறன் (IQ) என்ன என்று கேட்டால், தம்பி தங்கைகள் ஆ! ஓ! என்று புகழ்ந்து தள்ளிவிடுவீர்கள் என்ன அப்படித்தானே! அதெல்லாம் ஒன்றுமில்லை கணினியின் IQ என்ன தெரியுமா? பூச்சியம். இன்னும் உங்களுக்கு புரிகிற மாதிரி சொல்வதென்றால், முட்டாள்...தம்பி கோவிக்காதையடா கொம்பியூட்டரை சொன்னேன்.

ஆனால் நம்ம விஞ்ஞானிகள் விடுவார்களா! செயற்கையான மதிநுட்ப திறனை உருவாக்குகின்றார்கள்.



• குரும்பையூர் கணினியன்



அதனால் ஒரு மனிதனைப் போன்று மட்டுப்படுத்தப்பட்டளவில் பல்வேறு வேலைகளை ஆற்றமுடியும். ஆனாலும் கப்பல் பார்க்கப்போன வேலைக்காரன் தான்.

குட்டிகளே இன்னொன்று சொல்லட்டுமா? சிந்துபாத் நாடகத்தில் வரும் "சில்லி"யும் இது மாதிரியான ஒரு கற்பனைதான். இப்ப புரிகிறதா.

இந்த ஐந்தாம் தலைமுறை கணினியை யப்பான் நாட்டவர்கள் KIPS என்று அழைப்பார்கள். இதன் அர்த்தம் அறிவு பூர்வமாக தொழிற்படக்கூடிய அலகு. இப்படியாக கணினியுடைய தலைமுறை


ஜே!

வெட்டுக்கிளிக்கு காதுகள் கால்களில் உள்ளனவாம்!


பற்றிய கதையெல்லாம் சொல்லியாகிவிட்டது.

அடுத்தது என்ன?

வன்பொருள், மென்பொருள் இரண்டைப்பற்றியும் கற்போம். ஏதோ கடைப்பொருள் என்று நினைத்துவிடாதீர்கள், இது தான்



❂சர்வதேச பொலிஸ் நிறுவனம் - இண்டர்போல்.



கணினியின் மூலப்பொருள். ஏன் எங்கள் ஒவ்வொருவரிலும் கூட இவை காணப்படுகின்றன. என்னவென்று கேட்கிறீர்களா? எங்களுடைய கை, கால் உடம்பு இவையெல்லாம் தான் வன் பொருட்கள். எங்களுடைய எண்ணங்கள் அல்லது மனசு என்று சொல்கிறோமல்லவா, அவைதான் மென்பொருள். இப்போ தெளிவாச்சா? இந்த இரண்டிற்கும் ஒரு சிறு வரைவிலக்கணம் கொடுப்போமா?

தொட்டு உணரக்கூடிய பௌதீக உறுப்புக்கள் அனைத்தும் வன்பொருட்கள் ஆகும். அனைத்து (Program) புரோகிராம்களும் மென்பொருட்கள் (Software) ஆகும்.

அதென்ன புரோகிராம்? தம்பி அப்பாவை கஸ்டப்படுத்தாதையப்பா, அதுதான் அடுத்த பூங்கனியில நாங்க சொல்லுவோமுல்ல..... ஹி....ஹி....ஹி.... கோவிச்சுக்காதை தம்பி விபரம் அனைத்தும் விளக்கமாகச் சொல்லுவேன்.

விடைபெறும் போது சின்னதாக ஒன்று சொல்லட்டா. கொம்யூட்டருக்கு Hard ware உம் பிடிக்கும், Software உம் பிடிக்கும், ஆனால் Footware பிடிக்காதாம். அதுதான் பாதணி போட்டால் பிடிக்காது. புரிகிறதா?

சந்திப்போம்...

※ *மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு.*

மனைவி மாண்புடையவளாக அமைவது இல்லறத்திற்கு நல்லது. அதுபோல் அறிவுள்ள மக்களைப் பெறுவது இன்னும் நல்லது.

# வர்ணம் தீட்டுங்கப்பா



# COLOUR PLEASE

# தம்பி கொஞ்சம் நில்லு



முதன் முதலில் தும்பா ராக்கெட் தளத்திலிருந்து 1963ஆம் ஆண்டு ராக்கெட் விண்வெளியில் செலுத்தப்பட்டது.


பிலிப்பைன்ஸ் நாட்டில் கூம்பு வடிவில் ஆயிரக் கணக்கான சிறிய மலைகள் உள்ளன. இவற்றுக்கு சாக்லெட் மலைகள் என்று பெயர்.





ஒரு தேக்கரண்டியை நிரப்புவதற்கு 120 துளிகள் தண்ணீர் தேவைப்படுகிறது.

குபாங்கோ என்ற ஆறு அங்கோலா நாட்டில் உற்பத்தியாகி 1590 கி.மீ ஓடியபிறகு கலகாரி என்னும் பாலைவனத்தில் மறைந்துவிடுகிறது.





நி ரு ப ரா வ த ற் கு!

பூங்கனியின் பாடசாலைமட்ட நிருபராவதற்கு, உங்கள் சொந்த கையெழுத்தில் பெயர், முகவரி, கல்வி கற்கும் பாடசாலை போன்றவற்றைக் குறிப்பிட்டு, ஒரு மாதிரிப் படிவத்தை தயார் செய்து உங்கள் கையொப்பம், அதிபரின் கையொப்பம் போன்றவற்றையும் பெற்று, Stamp Size போட்டோக்கள் இரண்டினையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். பின்னர் தனிப்பட்ட கடிதமும், படிவமும் எம்மால் அனுப்பி வைக்கப்படும்.

## நிருபவராவதற்கான தகைமைகள்

- பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளை அறிக்கைகளாக சமர்ப்பிக்கக் கூடியவராயிருத்தல்
- சிறந்த தொடர்பாடலும், நாணயமாகவும், நேர்மையாகவும் இருத்தல் நன்று.
- பாடசாலையிலோ அல்லது தனிப்பட்ட ரீதியாகவோ தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் உடையவராயிருத்தல் நன்று.
- தொடர்ந்து அதே பாடசாலையில் இரண்டு வருடங்களாவது கற்பதை உறுதி செய்தல் நன்று.

**அனுப்பவேண்டிய முகவரி**

பூங்கனி நிருபர்,
1ம் மாடி,
Y.M.H.A கட்டிடம்,
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

### நிருபராயிருப்பதன் மூலம்

- பாடசாலை மட்ட நிகழ்வுகளையும் பெறுபேறுகளையும், அறிவித்தல்களையும் உடனடியாக தெரியப்படுத்த முடிகின்றமை.
- சாதனையாளர்களையும், சாதனைகளையும் உடனடியாகவே தெரியப்படுத்தும் வாய்ப்பு
- நெருக்கடி நேரத்திலும் தனிப்பட்ட ரீதியாக எம்முடன் தொடர்பு கொள்வதன்மூலம் வேலைகளை இலகுவாக்குதல்.

ஈரானின் தலைநகரம் – தெஹ்ரான்.

# வெளிவந்தது

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் வெளியீடாக மாருதம் சஞ்சிகையின் ஏழாவது இதழ் கடந்த 10.07.2006 திங்கள் பௌர்ணமி தினத்தன்று, ஏராளமான இலக்கிய ஆர்வலர்களின் முன்னிலையில், காலை 10 மணிக்கு நகரசபை மண்டபத்தில்வைத்து வெளியிடப்பட்டது.





இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற அரசின் அதியுயர் விருதான **கலாபூஷண** விருதின் 2006ம் ஆண்டுக்கான விருது வழங்கும் வைபவத்தில் **கவிஞர் கயல்வண்ணனுக்கும்** (ப.க.சிதம்பரப்பிள்ளை) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ப.க சிதம்பரப்பிள்ளை ஓய்வுபெற்ற கிராம உத்தியோகஸ்தர். சேவைக்காலத்தில், இவரது சேவைகளைப் பாராட்டி சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவர் வவுனியா மதவுவைத்தகுளத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மிகச்சிறந்த கவிஞர். இவரை பூங்கனி வாசகர் சார்பிலும் வாழ்த்துகிறோம்.

**ஆதி சங்கரரின் வாழ்க்கை வரலாறும், சாதனைகளும்** எனும் நூல் 14.07.2006 அன்று காலை 10 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் (ஐயாத்துரை அரங்கத்தில்) வெளியிடப்பட்டது.



இளம் எழுத்தாளர் **ந.செந்தூரன்** அவர்களுக்கு கவிஞர், அறிவிப்பாளர், விஜய் பத்திரிகையின் செய்தியாளர் என பல முகங்கள் உண்டு. தமிழருவி சிவகுமாரன் ஆசிரியரின் தலைமையில் இனிதே நடைபெற்றது நிகழ்வு.

# Sports News



## கோலாகலத் திருவிழா



David Beckham-England

ஒரு மாதம் நடந்து முடிந்திருக்கிறது அந்த கோலாகலத் திருவிழா.

பேர்லின் ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியை உலகம் முழுவதும் 200கோடி ரசிகர்கள் பார்த்து மகிழ்ந்தனர். இப்படி அதிகம் பேர் பார்த்திருக்க சிகப்பு அட்டை வாங்கியவரென்றால் அது பிரான்சின் ஜீடேன்தான்.

இறுதியாக இத்தாலி வீரரை தலையால் தாக்கி விளையாட்டு உலகிலிருந்து விலகிக்கொண்டவர்.

உண்மையிலேயே உலக உதைபந்தாட்டப்போட்டி ஒரு கோலாகலத் திருவிழாதான் 32 நாட்டு அணிகள். ஒரு 6175 கிராம் எடைகொண்ட 18கரட் தங்கத்தாலான கிண்ணத்திற்காகவும், ஒரு தங்க பாதணிக்காக




704 கால்களும் போட்டியில் களமிறங்கியிருந்தன.

இந்த பந்தயத்தில் ஜெயிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட ஜேர்மனி, போர்த்துக்கல், பிரேசில் போன்ற அணிகள் திருவிழாவில் காணாமல் போன குழந்தைகளாய் தொலைந்துபோக,

குழந்தைகளை தொலைத்த பெற்றவர்கள் போல், அழுது புலம்பினார்கள் ரசிகர்கள்.

இருபத்திநான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ரசிகர்களுக்கு

தென்கொரியாவின் தலைநகரம் – சியோல்.




விருந்தளித்திருக்கிறது இத்தாலி அணி. முறையே 1934, 1938, 1982. அதற்குப் பின் 2006.

இதில் இன்னுமொரு ஆச்சர்யப்படவைக்கும் விடயம் என்னவென்றால், தற்போதைய உலகக்கிண்ணத்தை வடிவமைத்தவரும் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்தான், 1974ம் ஆண்டு.

18 கரட், 6175 கிராம், 36.8 செ.மீ உயரம் கொண்டது. இதனை வடிவமைத்தவருக்கு தற்போது 75வயதாகிறது. அவர்தான் சில்வியோ கஸ்ஸானிகர்.

இவருக்கு ஒரு கனவு இருந்தது. "தான் இறப்பதற்கு முன்பாக இத்தாலி அணி மீண்டும்மொருமுறை கிண்ணத்தைப் பெறவேண்டும்" என்பதுதான், அது இப்போது நனவாகிவிட்டது.

இந்தக் கிண்ணத்தை முறையே ஆர்ஜென்டீனா 1978, 1986. இத்தாலி 1982ம். ஜேர்மனி 1990ம். பிரேசில் 1994, 2002ம். பிரான்ஸ் 1998ஆம் ஆண்டும் பெற்றுக்கொண்டது.

இந்தத் தடவை கோல்டன் சூவை ஜேர்மனி வீரர் மிரோஸ்லோவ் குளோஸ், குளோஸ்பண்ணினார். அதுபோல வெள்ளிக்காலணி, வெண்கலக்காலணியை முறையே ஆர்ஜென்னாவின் கிறிஸ்யே ஹொறிக்சனும், பிரேசிலைச் சேர்ந்த ரொனால்டோவும் பெற்றுக்கொண்டனர்.

இன்னும் சாதனைகள் ஏராளம்.




Claudio Javier Lopez

# இலக்கியம் சுவைப்போம்

எழுத்தாளர்கள் கையாள்வதற்கென்றே பிரத்தியேகமாகச் சில சொற்றொடர்கள் எல்லா மொழிகளிலும் உண்டு. ''வழிமேல் விழிவைத்து'' என்பது போன்ற இத்தகைய சொற்றொடர்களைத் தமிழில் ''மிகுவழக்குச் சொற்றொடர்கள்'' என்று கூறலாம்.

இது புகழேந்திப் புலவரின் நளவெண்பாவில் வருகிறது. இன்று பாமரரும் பயன்படுத்தும் அளவுக்குப் பிரபலம் அடைந்துவிட்டது.




**''வழிமேல் விழிவைத்து**
**வாள்நுதலாள் நாம**

**''மொழிமேல் செவிவைத்து**
**மோகச்சுழிமேல் தன்''**

**''நெஞ்சோட வைத்தயர்வான்**
**கண்டான் நெடுவானில்**
**மஞ்சோட அன்னம் வர...!''**

நளன் அன்னத்தைத் தூதாகத் தமயந்தியிடம் அனுப்பிவிட்டு, அது வராதா என்று வழிமேல் பார்வையையும், ''தமயந்தி'' என்னும் பெயரின் இனிய ஓசையில் காதுகளையும், ஆசை என்னும் சுழன்ரோடும் வெள்ளத்தில் மனத்தினையும் வைத்து, நொந்த நளன், வானில் மேகங்கள் கலைந்து ஓட தூதுசென்ற அன்னம், மீண்டு வருவதைக் கண்டான். அவனது தவிப்பைப் படம்பிடித்தது போல் காட்டும் நளவெண்பாப் பாடல்தான் இந்தப்பாடல்.

**...மீண்டும் சுவைப்போம்.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 02

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 டி | 3 கா | 4 ர | 5 ம் | ■ |
| 6 ண | 7 பா | ■ | 8 தி | 9 பி | 10 டி |
| ■ | 11 கி | 12 ரு | 13 ம் | 14 பு | ■ |
| 15 பா | 16 ச | 17 ம் | ■ | 18 ஏ | 19 தி |
| 20 ட் | ■ | 21 த | 22 வி | ■ | 23 ல் |
| 24 டு | ■ | 25 ட | 26 டு | ■ | 27 லை |

போட்டி 01க்கான முடிவுகள் கனி 12இல் இடம்பெறும்.

## இடமிருந்து வலம்

01. நேரத்தைக் காட்டுவது
06. அநேகரின் காலை உணவு (திரும்பியுள்ளது)
08. மாதவனின் திரைப்படம் (குழம்பியுள்ளது)
11. யானை விரும்பி உண்ணும்
15. அன்பை இப்படியும் சொல்லலாம்
18. அழகானவர்களை இப்படிச் சொல்வார்கள்
21. தனிமையின் அவஸ்தையை குறிப்பதின் கடைசி இரண்டு எழுத்துக்கள் விடப்பட்டுள்ளன.
25. மலையும் இதுவும் போல் என்பார்கள்

**சேரல்**

குறுக்கெழுத்துப்போட்டி - 02
பூங்கனி பிரஸ்,
1ம் மாடி,
Y.M.H.A கட்டிடம்,
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

## மேலிருந்து கீழ்

01. கற்காதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையர் கற்றவர் முகத்தில்....
02. கூடித்திரிபவன் (குழம்பியுள்ளது)
04. தேரின் மறுபெயர்
05. மறதிக்கு மருந்து வாத்தியாரின்....(குழம்பியுள்ளது)
12. வயலும் வயல் சார்ந்த இடமும் (குழம்பியுள்ளது)
15. இசையும் கவிதையும் சேர்வது
19. நடராஜரை.....கூத்தன் என்பர்
22. அம்பு "எய்" இதைக் குறிக்கும் இன்னோர் சொல்

**சரியான விடைகளை எழுதி, 30.08.2006ம் திகதிக்குள் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். அதிஷ்டசாலிகளாக தெரிவுசெய்யப்படும் 3 பேருக்கு தலா 500, 300, 200 ரூபா பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். என்ன இப்பவே ரெடியாகிட்டீங்களா...?**

*சவுதி அரேபியாவின் தலைநகரம் - ரியாட்.*






## ஆக்கங்களை அனுப்பும்போது....

- தாளின் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதுங்கள்.
- தெளிவான கையெழுத்தில் உங்கள் ஆக்கங்கள் அமையட்டும்.
- ஓவியங்கள் அனுப்புவதாயின் கறுப்புநிறப் பேனாவால் அல்லது பென்சிலால் வரைந்து அனுப்புங்கள் வர்ண ஓவியங்கள் இப்போதைக்கு வேண்டாமே பிளீஸ்!
- உங்கள் பெயர், முகவரி போன்றவற்றை தெளிவாக கடித உறையிலும் ஆக்கம் எழுதும் தாளிலும் எழுத வேண்டும்.
- பொது அறிவுத் தகவல்கள், மருத்துவக் குறிப்புகள் போன்றவற்றை அனுப்பும்போது அவற்றை எங்கிருந்து பிரதி செய்தீர்கள் என்பதை தவறாமல் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

**ஜ!**

சுவீடன் நாட்டில் 96000 ஏரிகள் உள்ளனவாம்.

*1 – 50 வரையான ஒருவரித் தகவல்களை தொகுத்து அனுப்பியவர்*
**கோ.சர்மிளா**
*தரம் – 09, வ/மாறாவிலுப்பை அ.த.க.பாடசாலை, நெடுங்கேணி.*

விளம்பரங்கள் மற்றும் ஏனைய தொடர்புகளுக்கு
**பூங்கனி பிரஸ்**
1ம் மாடி, Y.M.H.A கட்டிடம்.
புகையிரத நிலைய வீதி, வவுனியா.
☎ 024 2225086

இஸ்ரேலின் இரகசிய சேவை – சிம்பொற்.

பூங்கனியின்

# முதலாவது ஆண்டு நிறைவு

# சிறப்பு மலராக

எமது பன்னிரெண்டாவது
இதழ் அதிக பக்கங்களுடன் வெளிவர
இருக்கிறது. பக்கங்களை நீங்களும்
அலங்கரிக்கலாம். வாழ்த்துகளும்,
ஆக்கங்களும், 10ம் திகதிக்கு
முன் கிடைக்குமாறு
அனுப்பி வையுங்கள்.

இச்சஞ்சிகை பூங்கனி பப்ளிகேசன் ஊடாக 32, புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பில் உள்ள யுனி லங்கா பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.




விளம்பரம் செய்ய
ஈசியான வழி..!

**MAN POWER**

விரல் நுனியில்
உலகம்

AGENT AND ADVERTISING SERVICE

1st Floor, Y.M.H.A Building, Station Road, Vavuniya. T.P : 024 2225086

The Poonkani, A monthly magazine for children was printed at Uni Lanka, 32, St.Antony's Mawatta, Colombo-13.
on be have of Poonkani Publication, on 1st August 2006